[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜனவரி 12

கோரப்படவுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் வடிவமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு, இரயில்வே துறைமூலம் மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக அணுகு சாலைப் பணிகளும் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) குட்கா பிரச்சினை வழக்கு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் குட்கா பிரச்சினைக் குறித்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வழக்கில், வருமான வரித் துறை ஒரு பதில் மனு தாக்கல் செய்திருக்கிறது. அப்படித் தாக்கல் செய்திருக்கக்கூடிய அந்தப் பதில் மனுவிலே மிகத் தெளிவாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீதிமன்றத்தில் இருப்பதை நாம் எப்படிப் பேச முடியும்? எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதது இல்லை. (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் வருகின்ற மனு குறித்தெல்லாம் எப்படிச் சட்ட மன்றத்தில் நான் எடுத்துக்கொண்டு பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்) அதை என்னவென்று நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்களும் வக்கீல் வைத்து வாதம் செய்வீர்கள். அதை நீங்கள் நீதிமன்றத்தில்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தினுடைய உத்தரவு ஏதாவது வந்தால் நாம் பார்க்கலாம். நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள பிரச்சினையில் நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) அதை நீங்கள் நீதிமன்றத்தில்தான் பேச வேண்டும். நீதிமன்றத்தில் இருப்பது குறித்து நான் என்ன பேச முடியும்? (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் இருப்பது குறித்து நீதிமன்றத்தில்தான் பேச வேண்டும்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)